TNTAM/25/A3638

# காவல் விரைவு செய்தி

நீதி வெல்லும்

தமிழ் மாத இதழ்

| Volume: 1 | Issue: 8 | June 2026 | 8 Pages | Rs. 10/- |
|---|---|---|---|---|
| மலர் 1 | இதழ் 8 | ஜூன் 2026 | 8 பக்கம் | ரூ. 10/- |


# காவல்துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவராக திரு. மகேஷ் குமார் அகர்வால் இ.கா.ப அவர்கள் பொறுப்பேற்றார்



சென்னை, ஜூன்.

தமிழ்நாடு காவல்துறை தலைமை அலுவலகத்தில் (03.06.2026) காவல்துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவராக திரு. மகேஷ் குமார் அகர்வால் இ.கா.ப அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு.மகேஷ்குமார் அகர்வால் இ.கா.ப அவர்கள் தெரிவித்ததாவது:



கதிரவன், சென்னை மாவட்ட தலைமை நிருபர்

அனைவருக்கும் காலை வணக்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எனக்கு தமிழ்நாடு மக்களுக்கு சேவை செய்வதற்கு இந்த வாய்ப்பை கொடுத்ததற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை தொடர்ந்து கட்டுக்குள் வைப்பதற்கும் போதை பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கும் சைபர் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். தமிழ்நாடு காவல்துறையின் இந்த முயற்சிகளுக்கு பொதுமக்கள் மற்றும் உங்களின் தொடர் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம் என தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள காவலர்கள் நினைவு சின்னத்திற்கு (03.06.2026) தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவர் திரு.மகேஷ் குமார் அகர்வால் இ.கா.ப அவர்கள் மலர் வளையம்வைத்து மரியாதை செலுத்தினார்.

... ஆசிரியர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களை தலைமைச் செயலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு.மகேஷ் குமார் அகர்வால், இ.கா.ப. அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




காவல்துறை தலைமை இயக்குநர்/ படைத்தலைவராக பொறுப்பேற்ற

திரு. மகேஷ் குமார் அகர்வால் இ.கா.ப.,

அவர்களின் பணி சிறக்க வாழ்த்தும்...

காவல் விரைவு செய்தி

தமிழ் மாத இதழ்

# மதுரை... காவல்துறை செய்திகள்

மதுரை, ஜூன்.

மதுரை மாநகர காவல்

மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில், மாநகர காவல் சார்பாக (20.05.2026) நடைபெற்ற வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமில் 41 மனுதாரர்கள் நேரடியாக தங்களது புகார் மனுக்களை காவல் துணை ஆணையர் (வடக்கு) மற்றும் காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) ஆகியோரிடம் அளித்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த காவல் ஆணையர் அவர்கள், உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.




மதுரை மாநகர், C5 கரிமேடு காவல்நிலையத்திற்குட்பட்ட பகுதியில் இருசக்கர வாகனத் திருட்டில் ஈடுபட்ட 3 நபர்கள் மற்றும் திருட்டு வாகனங்களை வாங்கிய 2 நபர்கள் என மொத்தம் 5 நபர்களை மாநகர காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

மதுரை மாநகர் B1 விளக்குத்தூண் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மீனாட்சி கார் பார்க்கிங்கில், 24.05.2026 அன்று முன் விரோதம் காரணமாக நடந்த கொலை சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு. 5 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் அனைவரும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

மதுரை மாநகர் E2 மதிச்சியம் காவல் நிலையம், D1 தல்லாகுளம் காவல் நிலையம், திண்டுக்கல் மார்க்கெட், தஞ்சாவூர் அரசு மருத்துவமனை மற்றும் விராலிமலை பகுதிகளில் இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்ட திருச்சியை சேர்ந்த தியாகராஜன் 42/26, அருண் சந்தர் 41/26 மற்றும் இஸ்மாயில் 27/26 ஆகிய மூவர் கைது. மேலும் அவர்களிடமிருந்து 8 இரு சக்கர வாகனங்கள் பறிமுதல்.

மதுரை மாவட்ட காவல்துறை....

காவல்துறையில் பணியாற்றி வரும் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளின் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் படி 2024-2025 ஆம் ஆண்டிற்கான கல்வி ஆண்டில் மதுரை மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு சிறப்பு கல்வித் உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி (23.05.2026) காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு அரவிந்த் இ.கா.ப., அவர்கள் வழங்கி மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். மேலும் எதிர்காலத்தில் இதேபோன்று சிறப்பாக கல்வியில் சாதித்து முன்னேற வேண்டும் என அறிவுரை வழங்கி பாராட்டினார்.



மதுரை மாவட்டம் செக்காணூரனி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த 1) சிவகுமார் (40) நபர்ரை ரோந்து பணியில் ஈடுபட்ட காவல்துறையினர் கைது செய்து அவரிடம் இருந்து மொத்தம் 4 கிலோ கஞ்சா பறிமுதல் செய்தனர். இது போன்று கஞ்சா மற்றும் போதை பொருட்கள் தொடர்பாக தகவல் தெரிவிக்க 91760-79100 என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம். அதன் பேரில் தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்வதோடு, தகவல் தெரிவிப்போரின் விபரம் ரகசியம் காக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு காவல் துறை தென் மண்டலத்தில் 'ஆபரேஷன் ஷீல்டுநெட்' என்ற அதிரடி வேட்டை தொடங்கப்பட்ட நிலையில், முதல் நாளிலேயே அதிரடி காட்டிய மதுரை மாவட்ட காவல்துறை

மதுரை மாவட்டத்தில் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் 04 பேரும், பிடியாணைகள் நிலுவையில் உள்ள 09 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் போதை மாத்திரைகள் 520 பறிமுதல் செய்து ஒரு நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் 18.05.2026 அன்று விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த 1) சதீஷ் குமார் (41) 2) சுசீந்திரன் (49) ஆகிய இருவரை ரோந்து பணியில் ஈடுபட்ட காவல்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து மொத்தம் 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்தனர். மற்றும் மதுரை மாவட்டம் ஒத்தக்கடை மற்றும் கொட்டாம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனைக்கு வைத்திருந்த 1) முருகன்(40) 2) அடைக்கண் (26) ஆகியோரை ரோந்து பணியில் ஈடுபட்ட காவல்துறையினர் கைது செய்து அவர்களிடம் இருந்து மொத்தம் 32 கிலோ 25 கிராம் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். இது போன்று தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தொடர்பாக தகவல் தெரிவிக்க 91760-79100 என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம். அதன் பேரில் தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்வதோடு, தகவல் தெரிவிப்போரின் விபரம் ரகசியமாகக் காக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

... ஈஸ்வரி மணிமுத்து, இணை ஆசிரியர்

காவல் விரைவு செய்தி
தமிழ் மாத இதழ்
TNTAM/25/A3638
ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
ஸ்ரீதர்
9514213993
இணை ஆசிரியர்:
ஈஸ்வரி மணிமுத்து
நிர்வாக ஆசிரியர்:
சொப்னா
உதவி ஆசிரியர்:
டேனியல் ராஜ்,
தமிழ்நாடு தலைமை நிருபர்:
ஜெகதீஸ்வரன், நவீன்ராஜ்
மாவட்ட தலைமை நிருபர்கள்:
சுரேஷ், இளவரசன், நவநீதகிருஷ்ணன், முரளி, கதிரவன், இளையராஜா, ராமர், சங்கரபாண்டியன்,
நிருபர்கள்:
குமரன், ராஜேஷ்குமார், புஷ்பராஜ் கடலூர், சங்கரசுப்பிரமணியன், புஷ்பராஜ் திருச்சி, ராஜேஷ், பாலச்சந்திரன், அழகர் சாமி, பாலமுருகன், சஞ்சய், புருஷோத்தமன், ஹரிஹரன், சேது, முரளிமோகன், சக்திவேல், ராமலிங்கம், முகைதீன், வேலாயுதம், மணிரத்தினம், விஜி, விமல்ராஜ்
வடிவமைப்பு:
கிருபாகரன்
**Email:**
kaavalviraivuseithi@kaavalviraivuseithi.com
Website :
www.kaavalviraivuseithi.com

சிறப்புக்கட்டுரைகள், மற்றும் பேட்டியின் கருத்துக்கள், அதைத் தெரிவித்தவர்களின் சொந்த கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு 'காவல் விரைவு செய்தி' நிர்வாகம் பொறுப்பல்ல.

# திண்டுக்கல் மாவட்ட காவல்துறை செய்திகள்

திண்டுக்கல், ஜூன்.

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் போதைப் பொருள் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 825.411கிலோ கிராம் கஞ்சா அழிப்பு



திண்டுக்கல் மாவட்டத்தில் போதைப்பொருள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 42 வழக்குகளில் 177.326 கிலோ கிராம் கஞ்சாவும், அதேபோல் தேனி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 118 வழக்குகளில் 648.085 கிலோகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. 26.05.2026ம் தேதி திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட 825.411 கிலோ கிராம் கஞ்சாவினை அரசு வழிகாட்டு விதிகளின்படி திண்டுக்கல் சரக அளவிலான போதைப் பொருள் அழிப்பு குழு தலைவரான திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் மருத்துவர் சசிமோகன் இ.கா. ப., அவர்கள் மற்றும் குழு உறுப்பினர்களான திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப். இ.கா.ப., அவர்கள் திண்டுக்கல் மாவட்ட இயங்கும் தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குனர், திண்டுக்கல் மற்றும் தேனி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா பெருமாள்புரத்தில் அமைந்துள்ள Aseptic Systems Bio Medicàl Wastage Management நிறுவனத்தில் அளிக்கப்பட்டது.

போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட நபருக்கு 24 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.8,000/- அபராதமும் பெற்றுத்தந்த திண்டுக்கல் மாவட்ட காவல்துறையினர்.

25.05.2026 திண்டுக்கல் மாவட்டம் நகர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2025-ம் ஆண்டு சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சக்திகுமார் (22) என்பவரை திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் விரைவு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப், இ.கா.ப அவர்களின் அறிவுறுத்தலின் படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.வெங்கடாசலபதி அவர்கள், நீதிமன்ற தலைமை காவலர் திருமதி.தேன்மொழி அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.ஜோதி அவர்களின் சீரிய முயற்சியால் (25.05.2026) இன்று திண்டுக்கல் விரைவு மகிளா நீதிமன்ற நீதிபதி அவர்கள் குற்றவாளி சக்திகுமார் என்பவருக்கு 24 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.8,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள். இந்த ஆண்டு இதுவரை 19 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



ஆப்ரேஷன் SHIELDNET குற்றங்களை தடுக்க அதிரடி நடவடிக்கையில் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை

திண்டுக்கல் மாவட்ட காவல்துறையினர் (20.05.2026) முதல் நடைபெற்று வரும் ஆபரேஷன் SHIELDNET நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தீவிர தடுப்பு காவல் மற்றும் குற்ற தடுப்பு சிறப்பு இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கையின் கீழ், ரவுடிகள் மற்றும் சந்தேக நபர்கள் கண்காணிப்பு, நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பிடியாணைகள் (NBWs) நிறைவேற்றுதல், தீவிர வாகன சோதனை, BNSS சட்டப்பிரிவு 126 கீழ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் தொடர் குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையின் மூன்றாம் நாளில் காவல்துறையினர் 12 சந்தேகம் நபர்கள் உட்பட 160 ரவுடிகளை கைது செய்தும் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த 49 பிடி யாணைகள் கைது மூலம் நிறைவேற்றப்பட்டன. வாகன சோதனைகளின் போது, பதிவு எண் பலகை இன்றி இயக்குதல், அதிவேகம் மற்றும் ஆபத்தான ஓட்டம், மின்மினி விளக்குகள் பொருத்துதல் மற்றும் சட்ட விரோத மாற்றங்கள் செய்தல் போன்ற விதி மீறல்களுக்கு எதிரான 706 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் 09 ஜாமீன் ரத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. மேலும் ஜாமீன் ரத்து நடவடிக்கைகள் மற்றும் தொடர் குற்றவாளிகள் மீது நெருக்கமான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் மீது உறுதியான வழக்குப்பதிவு மற்றும் தண்டனை பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களும், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கட்டுப்படுத்தும் இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்ட காவல்துறையில் பணிபுரிந்து (31.05.2026) தேதியுடன் பணி ஓய்வு பெற இருந்த ஆயுதப்படை சார்பு ஆய்வாளர் திரு.போஸ் அவர்கள், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கைலாசம் அவர்கள், கூம்பூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.திருமுருகன் அவர்கள், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமச்சந்திரன் அவர்கள், மாவட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.பாக்கியச்சாமி அவர்கள், நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன் அவர்கள், ரெட்டியார் சத்திரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள், சாணார்பட்டி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்கள், செம்பட்டி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இளங்கோவன். அவர்கள் திண்டுக்கல் மாவட்ட தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.துரைச்சாமி அவர்கள், நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.சுந்தரி அவர்கள் மற்றும் விளாம்பட்டி காவல் நிலைய தலைமை காவலர் திரு.சந்திரசேகரன் அவர்களை (29.05.2026) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப், இ.கா.ப, அவர்கள் நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து பணி பாராட்டு சான்றிதழ் வழங்கினார்கள்.







... ராமர்

## திருச்சி மாவட்ட காவல்துறை செய்திகள்

திருச்சி, ஜூன்.

திருச்சி மாவட்ட காவல்துறை செய்திகள்



திருச்சி மாவட்டம், ஜெம்புநாதபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் குடும்ப பிரச்சினை காரணமாக மாமியாரை கொலை செய்த வழக்கில் தொடர்புடைய நபருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூபாய் 10,000/- அபராதமும் விதித்து (01.06.2026) தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

திருச்சி மாவட்டம், ராம்ஜிநகர் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்ற நபரிடம் செல்போனை பறித்து சென்ற வழக்கில் தொடர்புடைய இரண்டு இளஞ்சிறார்களுக்கு திருச்சி இளஞ் சிறார் நீதிக்குழுமத்தால் அறிவுரை வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்டம், லால்குடி பகுதியில் சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் தொடர்புடைய இளஞ்சிறாரை இரண்டு ஆண்டுகள் நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் வைக்கவும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் இளஞ்சிறார் நீதி குழுமத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், மணப்பாறை பகுதியில் சிறுமியை குழந்தை திருமணம் செய்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் தொடர்புடைய இளஞ் சிறாரை இரண்டு ஆண்டுகள் நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் வைக்கவும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் இளஞ்சிறார் நீதி குழுமத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், துறையூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கணவன் மனைவிக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் கணவனை கொலை செய்த வழக்கில் தொடர்புடைய பெண்ணிற்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூபாய் 10,000 அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், சிறுகனூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த நபரை கொலை செய்துவிட்டு பணம், நகை மற்றும் இருசக்கர வாகனத்தை திருடி சென்ற குற்றவாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூபாய் 15,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

### திருச்சி மாநகர காவல்துறை செய்திகள்:

திருச்சி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப் பளராக திரு. டோங்கரே பிரவிண் உமேஷ் (27.05.2026) பொறுப்பேற்றார்.




திருச்சி மாநகர காவல்துறையில் பயன்படுத்தப்பட்டு முதிராநிலையில் கழிவு (Pre-mature condemnation) செய்யப்பட்ட Traz Cama Jeep-1, Tata Sumo Grande-1, MM540 Jeep-1, Swaraj Mazda-1, Eicher Vajra-1, Tata Varun-1, Temp Traveller Mortuary Van-1 மற்றும் சாதாரண நிலையில் கழிவு செய்யப்பட்ட Tata Sumo Gold Jeep-1, Tata Sumo Victa-1 என மொத்தம்-09 வாகனங்கள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

வருகின்ற 16.06.2026-ந்தேதி காலை 10.00 மணிக்கு திருச்சி மாநகர ஆயுதப்படை மைதானத்தில் வைத்து பொது ஏலம் நடைபெறுகிறது. வாகனத்தை ஏலம் எடுக்க விரும்புவோர் 11.06.2026 முதல் 15.06.2026 -ம் தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை திருச்சி மாநகர ஆயுதப்படை வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ள காவல் வாகனத்தை பார்வையிட்டுக் கொள்ளலாம். மேலும் வாகனங்களை ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் நடைபெறும் நாளான வருகின்ற 16.06.2026-ந் தேதி காலை 0800 மணி முதல் 1000 மணி வரை தங்களது ஆதார் அட்டையுடன் ரூ.5000/- முன் பணமாக செலுத்தி தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஏலம் எடுத்த உடன் ஏலத் தொகையுடன், அதற்குரிய சரக்கு மற்றும் சேவை வரியான GST தொகையையும் செலுத்தி வாகனத்தை பெற்றுக்கொள்ளலாம் என திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி. காமினி இ.கா.ப., தெரிவித்துள்ளார்கள்.

பள்ளி சிறுமியை ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்கொடுமை செய்த எதிரி சந்திரசேகர் என்பவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.25,000/- அபராதம் விதித்து திருச்சிராப்பள்ளி மாண்பமை அமர்வு நீதிபதி, மகிளா நீதிமன்றம் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

திருச்சி மாநகர எல்லைக்குட்பட்ட உறையூர் காவல் நிலைய பகுதியில் அரசால் தடைசெய்யப்பட்ட 2.607 கிலோ குட்கா பொருட்கள் வைத்திருந்த நபர் கைது. May 22 கடந்த 48 மணி நேரத்தில் 23 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் (History Sheeters) மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

... புஷ்பராஜ்

## கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை செய்திகள்



கன்னியாகுமரி, ஜூன்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R. ஸ்டாலின் IPS அவர்கள் கடந்த ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதி “நிமிர் (The Rising Team)” என்ற போக்சோ விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

போக்சோ குற்றங்கள் இல்லாத, குழந்தைகள் பாதுகாப்பாக வளரக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, பல்வேறு சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அடையாளம் கண்டு தொடர்ந்து கண்காணித்து வழிகாட்டி வருகிறது. அதில் குறிப்பாக, பெற்றோர் இல்லாத குழந்தைகள் ஒரு பெற்றோர் மட்டுமே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் போதைப் பழக்கத்திற்கு ஆளான குழந்தைகள் குடும்பம் மற்றும் பொருளாதார சிக்கல்களால் பள்ளிப்படிப்பை கைவிட்ட மாணவர்கள் செல்போன் பயன்பாட்டிற்கு அடிமையான குழந்தைகள், Free Fire உள்ளிட்ட ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையான மாணவர்கள் போன்ற பல்வேறு அபாய சூழ்நிலைகளில் இருந்த குழந்தைகள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக, பள்ளிக்குச் செல்லாமல் இருந்த 483 மாணவ மாணவிகள் மீண்டும் கல்வியுடன் இணைக்கப்பட்டு, அவர்களின் பள்ளிப்படிப்பு தொடர உறுதி செய்யப்பட்டது. மேலும், பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய நிலையில் இருந்த மாணவர்களில், நிமிர் குழுவின் தொடர் வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பின் மூலம் மீண்டும் கல்வியை தொடர்ந்த 172 மாணவ மாணவிகள், தற்போது நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றுள்ளனர்.

இதனை முன்னிட்டு, கல்வியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளின் ஒன்று கூடல் நிகழ்ச்சி (25.05.2026) கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R. ஸ்டாலின் IPS அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளையும், நிமிர் குழுவில் பணியாற்றிய போலீசாரையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் சந்தித்து பாராட்டினார்.

மேலும், மாணவர்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான முழுமையான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என உறுதியளித்தார். இந்நிகழ்ச்சியில், சமூக மாற்ற முயற்சியில் சிறப்பான பங்களிப்பை ஆற்றிய நிமிர் குழுவின் மேற்பார்வையாளர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிரமணியன் ஆய்வாளர் திருமதி. கோமதி மற்றும் 15 பெண் காவல்துறையினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் பாராட்டப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர். மேலும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. இரா. பிரின்ஸ் ஆரோக்கியராஜ், இந்து கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. சிதம்பரதாணு, மற்றும் Red Academy நிறுவனர் திரு. ஆஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்ததுடன், பன்னிரண்டாம் வகுப்பிற்கு பின் உள்ள உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர். குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் இந்த முயற்சி, பொதுமக்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பு... நம் ஒவ்வொருவரின் பொறுப்பு...

போதைப் பொருட்களுக்கு எதிராக குமரி மாவட்ட காவல்துறையின் தொடர் வேட்டையில் 3.5 கிலோ குட்கா பறிமுதல் ஒருவர் கைது .




கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R. ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.அதன் தொடர்ச்சியாக, அஞ்சுகிராமம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக குட்கா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், அஞ்சுகிராமம் போலீசார் தீவிர சோதனை நடத்தினர். மேற்கொண்ட சோதனையில், செண்பகராமபுரம், சத்தியநகர் பகுதியை சேர்ந்த முருகன் என்பவரின் மகன் மகேஷ்(40) என்பவர் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3.5 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டு அஞ்சுகிராமம் காவல் நிலைய குற்ற எண் 130/2026 U/S 6(b) r/w 24(1) cotpa Actஇன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.



அதன் தொடர்ச்சியாக தக்கலை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். மேற்கொண்ட சோதனையில் பறக்கை பூக்குழி தெரு பகுதியை சேர்ந்த செல்வம் என்பவரின் மகன் தவசி (24) என்பவரை கைது செய்த காவல்துறையினர் அவரிடம் விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 1.1 கிலோ கிராம் அரசால் தடை செய்யப்பட்ட கஞ் சா பறிமுதல் செய்து நிலைய குற்ற எண் 238/2026 U/S 8(c) r/w 20(b) (II)(B)NDPS Act சட்டப் பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இரணியல் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக குட்கா விற்பனை நடை பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், இரணியல் போலீசார் தீவிர சோதனை நடத்தினர்.

மேற்கொண்ட சோதனையில், பண்டாரக்காடு பெருமாள் கோவில் தெரு பகுதியை சேர்ந்த தங்கமணி என்பவரின் மகன் சபிந்திரன்(46) என்பவர் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 11 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டு இரணியல் காவல் நிலைய குற்ற எண் 260/2026 U/S 6(a) r/w 24(1) cotpa Actஇன் கீழ் வழக்கு பதிந்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப் பொருட்கள் விற்பனை, கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடுபவர்கள் மீது இனியும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என காவல்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முதல் முறையே மறுப்போம்... போதை பாதையை தவிர்ப்போம்...

... டிகிரி இளையராஜா, ராஜேஷ்குமார், குமரன், வேலாயுதம்

## திருப்பூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

திருப்பூர், ஜூன்.



பல்லடம் காவல் ஆய்வாளர்

திருப்பூர் மாவட்ட காவல்துறை சார்பில், மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வரலாற்று போக்கிரிகள் (History Sheeter Rowdies) செயல்பாடுகளை கண்காணித்து சரிபார்க்கும் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கிரிஷ் யாதவ், IPS அவர்களின் உத்தரவின்பேரில், ஒவ்வொரு உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, இந்நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

21.05.2026 மற்றும் 22.05.2026 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இந்த சிறப்பு சோதனையின் போது, மொத்தம் 133 ரவுடிகள் மற்றும் வரலாற்று போக்கிரிகள் சரிபார்க்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

மேலும், குற்றச்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த 5 வரலாற்று போக்கிரிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு, அவர்கள்மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், அனைத்து ரவுடிகளுக்கும் இனி எந்தவித சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடக்கூடாது என கடுமையான எச்சரிக்கை வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெளிவுபடுத்தப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பையும், சட்டம் ஒழுங்கையும் நிலைநிறுத்த திருப்பூர் மாவட்ட காவல்துறை தொடர்ந்து உறுதியாக செயல்பட்டு வருகிறது.

பல்லடம் காவல் நிலைய எல்லையில் சுமார் 708 கிலோகிராம் புகையிலைப் பொருட்கள் பறிமுதல்.

14.05.26-அன்று திருப்பூர் மாவட்டம் பல்லடம் காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத விற்பனைக்காக காரில் புகையிலைப் பொருட்களை கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலையடுத்து, பல்லடம் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் ஆளினர்கள் கரைப்புதூர் பகுதியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே வந்த Mahibdra XUV காரை நிறுத்தி சோதனை செய்தபோது, அதில் புகையிலைப் பொருட்கள் கடத்தி வந்தது



கண்டுபிடிக்கப்பட்டு, இதில் ஈடுபட்ட 1.லோத்தா பாபா பாய்(33) த/பெ. பஞ்காபாய், பனாஸ்காந்தா, குஜராத் 2.ராஜேந்திரா(29) த/பெ. படாரி ராம், ஜோத்பூர், ராஜஸ்தான் ஆகியோரை கைது செய்து, சுமார் 708 கிலோகிராம் புகையிலைப் பொருட்கள் மற்றும் காரை பறிமுதல் செய்து, பல்லடம் காவல்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்கண்ட எதிரிகள் இருவரையும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது.

திருப்பூர் மாவட்ட காவல்துறை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது, மேலும் போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் இருப்பின் பொதுமக்கள் உடனடியாக காவல்துறையிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

... நவநீதகிருஷ்ணன்

## தென்காசி மாவட்ட காவல்துறை செய்திகள்

தென்காசி, ஜூன்.



பைக்கில் வந்து தொடர் தாக்குதல் குற்றத்தில் ஈடுபட்ட 8 பேர் கைது - திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையின் தீவிர நடவடிக்கை

28.05.2026 அன்று திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பிரம்மதேசம் பகுதியில் மணிகண்டன் (29) என்பவரை இருசக்கர வாகனங்களில் வந்த கும்பல் வழிமறித்து பணம் கேட்டு மிரட்டி, அவரது இடது கை விரலில் காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றது. அதே கும்பல், வாகைகுளம் பகுதியில் உள்ள சிற்பக்கலை தொழிற்கூட உரிமையாளர் செல்வ கணேசனை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்தில் அங்கு சென்றபோது அவர் இல்லாததால், அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தி, அங்கு பணியாற்றிய நபரிடமிருந்து செல்போனை பறித்துக் கொண்டு, அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியில் சாலையோரமாக நடந்து சென்ற ஒருவரை தாக்கி காயம் ஏற்படுத்தினர். இதனைத் தொடர்ந்து, 29.05.2026 அன்று மாலை தென்காசி மாவட்டம் ஆலங்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நெட்டூர் பகுதியில், முன்விரோதம் தொடர்பான வாய்த்தகராறின் காரணமாக இருசக்கர வாகனங்களில் வந்த அதே கும்பல் ஆறு பேரை தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றது. மேலும், அங்கிருந்து தப்பிச் செல்லும் போது திருநெல்வேலி மாவட்டம் மானூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தெற்குப்பட்டி பகுதியில் அதிவேகமாக சென்ற இருசக்கர வாகனங்களை கண்டித்த நிலையில், சாலையோரத்தில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட வாய்த்தகராறில் முபாரக் (30) மற்றும் அப்துல் ரஹுமான் (36) ஆகியோரை தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர். மேற்கண்ட சம்பவங்கள் தொடர்பாக அம்பாசமுத்திரம், ஆலங்குளம் மற்றும் மானூர் காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையினர் உடனடியாக உஷார்படுத்தப்பட்டனர். கூடுதல் காவல் படை களமிறக்கப்பட்டு, இரு மாவட்டங்களிலும் ஆயுதம் ஏந்திய தீவிர வாகன சோதனைகள் (Vigorous Armed Vehicle Checks) மேற்கொள்ளப்பட்டன.

குற்றவாளிகளை கண்டறிந்து கைது செய்ய ஒருங்கிணைந்த தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், வழக்கமாக குற்றவாளிகள் பதுங்கக்கூடிய இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, மேற்கண்ட சம்பவங்களில் தொடர்புடைய 3 இளஞ்சிறார்கள் உட்பட மொத்தம் 8 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இரு மாவட்டங்களிலும் ஆயுதம் ஏந்திய வாகன சோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், குற்றவாளிகள் தொடர்பான தகவல்கள் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ட்ரோன், மோப்ப நாய் படை உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப வசதிகளும் விசாரணை மற்றும் தேடுதல் பணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல், திருநெல்வேலி சரகத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ரவுடிகள் மற்றும் சட்டம்-ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக செயல்படும் நபர்களுக்கு எதிராக Anti-Rowdy Drive நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ...மணிரத்தினம்

## கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை செய்திகள்

கிருஷ்ணகிரி, ஜூன்.

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனைக்கு வைத்திருந்த நபர் கைது, மதுபானங்கள் பறிமுதல்

26.05.2026 சிங்காரப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் நாய்க்கனூர் அம்பேத்கர் நகரில் உள்ள எதிரியின் வீட்டில் அருகே சென்று சோதனை செய்ததில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் இருந்தது. மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து, அவரிடமிருந்து மதுபானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்

தேன்கனிக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது சட்டவிரோதமாக வெளி மாநில மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் காந்தி நகர் பகுதியில் உள்ள எதிரி வீட்டின் அருகே சோதனை செய்ததில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த வெளிமாநில மதுபானங்கள் இருந்தது. மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து, அவரிடமிருந்து மதுபானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

அட்கோ காவல் நிலைய எல்லைக் குட்பட்ட ஓசூர் to கிருஷ்ணகிரி NH ரோடு, பேரண்ட பள்ளி புதிய மேம்பாலம் அருகே போலீசார் வாகன சோதனையில் இருந்த




போது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது வெளிமாநில மதுபானங்கள் இருந்தது, மதுபானங்களை கடத்தி வந்த இரண்டு நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து வாகனத்துடன், மதுபானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து இரண்டு எதிரிகளையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்

பர்கூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது தபால் மேடு கிராமம், தேவராஜ் என்பவரது மாந்தோப்பில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் சோதனை செய்ததில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் இருந்தது. மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து, அவரிடமிருந்து வாகனத்துடன், மதுபானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

நாகரசம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேலம்பட்டி to காவேரிப்பட்டிணம் ரோடு, கானாங்குட்டை ஏரி அருகில் சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் சோதனை செய்ததில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் இருந்தது. மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து, அவரிடமிருந்து வாகனத்துடன் , மதுபானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

23.05.2026 சிங்காரப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது மிட்டப்பள்ளி கிராமம், காமராஜ் நகரில் சட்ட விரோதமாக மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் விரைந்து சென்று சோதனை செய்தபோது சட்ட விரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் இருந்தது. மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து மதுபானங்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

22.05.2026 உத்தனப்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது சட்ட விரோதமாக மதுபானங்கள் விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நாகமங்கலம் கிராமத்தில் உள்ள எதிரி கடையின் பின்புறம் சோதனை செய்த போது சட்டவிரோதமாக வெளிமாநில மதுபானங்கள் இருந்தது. மதுபானங்களை விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து வெளி மாநில மதுபானங்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்

சட்டவிரோதமாக கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த நபர் கைது. கஞ்சா பறிமுதல் செய்த காவல்துறையினர்...

27.05.2026 மத்திகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தளி to ஓசூர் ரோடு, கொத்தஜிகூர் பிரிவு ரோட்டில் போலீசார் வாகன தணிக்கையில் இருந்தபோது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்த சுமார் 12 கிலோ கஞ்சா இருந்தது. கஞ்சா வைத்திருந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து சுமார் 12 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

கிருஷ்ணகிரியில் சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதற்கு ஊறல் வைத்திருந்த 2 நபர்களை கைது செய்த காவல்துறையினர்...

கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேட்டியம்பட்டி கோபி கவுண்டர் கொட்டாய் அருகே உள்ள ஆஞ்சேரி மலை அடிவாரத்தில், சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் சோதனை நடத்தியபோது சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதற்காக ஊறல் வைத்திருந்த நபர்களை கைது செய்து, சுமார் 100 லிட்டர் ஊறல் மற்றும் 2 லிட்டர் சாராயத்தை பறிமுதல் செய்து அவற்றை சம்பவ இடத்திலேயே அழித்த போலீசார், இரண்டு எதிரிகள் மீதும் வழக்குப் பதிந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

... ஜெகதீஸ்வரன்

## நாமக்கல் மாவட்ட காவல்துறை செய்திகள்

நாமக்கல், ஜூன்.




நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி ஸ்டோர் மற்றும் சென்ட்ரல் சில்க்ஸ் ஆகிய ஜவுளிக் கடைகளில் கடந்த 26.05.2026-ம் தேதி அடையாளம் தெரியாத நபர்கள் மாடி வழியாக கடைக்குள் நுழைந்து, கண்காணிப்பு கேமராக்களின் (CCTV) இணைப்புகளை துண்டித்துவிட்டு பணத்தை திருடிச் சென்றனர். இதுகுறித்து திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

இக்குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை கண்டறிவதற்காக தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், இச்சம்பவம் தொடர்பாக நாகராஜ் (29), த/பெ. சந்திரசேகர், அனேக்கல் தாலுகா, பெங்களூரு மற்றும் அவரது உறவினர் ஒருவரும் குற்றவாளிகள் என்பது கண்டறியப்பட்டது. இதில் நாகராஜ் என்பவரை (02.06.2026) கைது செய்து, மேற்கண்ட கடைகளிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் ரூ.6.5 லட்சம் மீட்கப்பட்டும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. வழக்கில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளியை கைது செய்ய காவல்துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்ட விரைவான விசாரணையின் மூலம் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, திருடப்பட்ட பணம் ரூ.6.5 லட்சம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட காவல்துறையினரை நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்

குமாரபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டு சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதாக செய்தி ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பான விளக்கம்...

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் உட்கோட்டம், குமாரபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், (31.06.2026) இரண்டு சிறுமிகள் பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தப்பட்டதாக சில செய்தி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பாக, 31.05.2026 அன்று 13 வயது சிறுமியை பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தியதாக ஒரு நபர் மீதும், 3 வயது சிறுமியை பாலியல் சீண்டலுக்கு உட்படுத்தியதாக மற்றொரு நபர் மீதும் தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட இரு வழக்குகளிலும் தொடர்புடைய குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இந்த இரண்டு சம்பவங்களும் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற தனித்தனியான சம்பவங்களாகும். இவ்விரு சிறுமிகளும் ஒரே சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்பது போன்று சில செய்தி ஊடகங்களில் ஒளிபரப்பப்படுவது தவறான தகவலாகும். இவ்விரு குற்றச் சம்பவங்கள் தொடர்பாக குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்து உடனடியாக கைது செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட சிறுமிகளின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் (01.06.26) குமாரபாளையம் பகுதியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். காவல்துறையினர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, வழக்குகளில் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து விளக்கியதைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

இரு வழக்குகளிலும் காவல்துறையினர் விரைவான நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். மேலும், குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் கடுமையான தண்டனை பெற்றுத்தர தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை நாமக்கல் மாவட்ட காவல்துறை சார்பாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

... ஆசிரியர்

## கோவை மாவட்ட காவல்துறை செய்திகள்

கோவை, ஜூன்.



கோவையைச் சேர்ந்த 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில், கைதான இருவரை மூன்று நாள் காவலில் விசாரிக்க போலீஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதைத் தொடர்ந்து போலீஸார் மூவரையும் ரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதியின் 10 வயது மகள், கடந்த மாதம் 21-ம் தேதி மாயமானார். மறுநாள் இரவு, கண்ணம்பாளையம் குளக்கரை பகுதியில் சடலமாக கிடந்தார். போலீஸாரின் விசாரணையில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டதும், சிறுமியின் பக்கத்து வீட்டில் வசித்து வந்த கார்த்தி (33) என்பவர் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததும் தெரியவந்தது. மேலும், இதற்கு அவரது நண்பர் மோகன் (30) என்பவர் உடந்தையாக இருந்ததும் தெரிந்தது. இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்தனர். மோகன்ராஜ் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். போலீஸாரிடம் இருந்து தப்ப முயன்ற கார்த்தி, கீழே விழுந்ததில் கால் முறிவு ஏற்பட்டு, கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைக்கு பின் சிறைக்கு திரும்பிய அவரை சக கைதிகள் தாக்கியதால் மீண்டும் கார்த்தி கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மேலும், இருவரையும் குண்டர் தடுப்புப் பிரிவிலும் போலீஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக கூடுதல் விவரங்களை பெற இருவரையும் காவலில் எடுத்து விசாரிக்க போலீஸார் முடிவு செய்தனர். அதைத் தொடர்ந்து சூலூர் போலீஸார், கடந்த 1-ம் தேதி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ நீதிமன்றத்தில், இருவரையும் 5 நாட்கள் காவலில் விசாரிக்க அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்தனர். அந்த மனு விசாரணைக்கு வந்தது. நீதிபதி பகவதியம்மாள் விசாரித்தார். இதற்காக (ஜூன் 3) மதியம் மருத்துவமனையில் இருந்த கார்த்தி ஸ்ட்ரக்சரில் படுக்க வைத்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டார். சிறையில் இருந்து மோகனும் அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். தொடர்ந்து போலீஸாரிடமும், கைதான இருவரிடமும் விசாரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கார்த்தி, மோகன் ஆகியோரை 3 நாட்கள் காவலில் விசாரிக்க போலீஸாருக்கு நீதிபதி அனுமதித்தார். தொடர்ந்து சூலூர் போலீஸார் இருவரயும் பலத்த பாதுகாப்புடன் தங்களது கஸ்டடி விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இருவரையும் தங்களது இடத்தில் வைத்து போலீஸார் விசாரித்து வருகின்றனர். முன்னதாக, (ஜூன் 2) மாலை சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதில், கார்த்தி, மோகன் ஆகியோரை நீதிபதி முன்னிலையில் 2 சாட்சிகள் அடையாளம் காட்டினர். விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை சாக்லெட் கொடுத்து அழைத்துச் சென்றதை பார்த்த ஒரு சாட்சி, வழித்தடத்தில் சிறுமியை கார்த்தி அழைத்து செல்வதை பார்த்த ஒரு சாட்சி ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களை அடையாளம் காட்டினர்.

... சங்கரபாண்டியன், முரளி மோகன்

## தேனி மாவட்ட காவல்துறை செய்திகள்

தேனி, ஜூன்.

தேனி மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு பெற்ற காவல்துறையினருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா, இ.கா.ப., அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில், நீண்ட காலமாக காவல்துறையில் நேர்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வு பெறும் காவல்துறையினரின் சேவையை பாராட்டி, அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.மேலும், ஓய்வு பெறும் காவல்துறையினரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், அவர்கள் காவல்துறைக்கு வழங்கிய அர்ப்பணிப்பான சேவை நினைவு கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறும் காவல்துறையினரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.

30.05.2026 தேனி நகரப் பகுதிகளில் சட்டவிரோதமாக இருசக்கர வாகனத்தில் மதுபானங்களை வைத்து வீதி வீதியாக கொண்டு சென்று விற்பனை செய்து வந்த நபர் மீது தேனி மாவட்ட காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டனர். இதுகுறித்து தேனி காவல் நிலையத்தில் குற்ற எண் 332/2026-ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார். மேலும், மதுபான விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

தேனி மாவட்டத்தில் காவல்துறையினர் மேற்கொண்ட சிறப்பு ரோந்து நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக கஞ்சாவை பதுக்கி வைத்திருந்த நபரை கைது செய்தனர். மேற்படி நபரிடமிருந்து சுமார் 5.7 கிலோ கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதுடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. கஞ்சா மற்றும் பிற போதைப்பொருள் கடத்தல்களுக்கு எதிராக தேனி மாவட்ட காவல்துறையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் குற்ற தடுப்புகளை முற்றிலும் தடுக்கும் பொருட்டு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா, இ.கா.ப., அவர்கள் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார், அதன் அடிப்படையில் சட்ட விரோதமாக கள்ளச்சந்தையில் மது விற்பனை நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு ரோந்து தீவிர படுத்தப்பட்டுள்ளது, மேலும் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் 85 கண்காணிக்கப்பட்டு 04 நபர்கள் கைது, குற்ற வழக்கில் ஈடுபட்ட சுமார் 199 வாகனங்கள் பறிமுதல், நீதிமன்ற பிடியானையில் (NBW) தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் 10 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

21.05.2026 தேனி மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்ட அதிரடி கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளின் மூலம் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்ட சரித்திர பதிவேடு குற்றவாளிகள் 71 நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், கைது செய்யப்பட்டவர்களில் 9 நபர்கள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காவல்துறையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

21.05.2026 தேவதானப்பட்டி காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காலை நேரத்தில் சட்டவிரோதமாக மது வாங்கி பொது இடங்களில் வைத்து மது அருந்தியவர்களை காவல்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு கண்காணித்தனர். இதனையடுத்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மது அருந்தியவர்களின் மீது வழக்குகள் பதிவு செய்து கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

பெரியகுளம் காவல் நிலையத்திற்குட்பட்ட தனியார் மதுபானக்கூடத்தில் தென்காசி மாவட்ட காவலர் சிதம்பரம் என்பவர் தனது நண்பருடன் சென்று மதுஅருந்திவிட்டு மதுபோதையில் பிரச்சனை செய்தவரை பெரியகுளம் காவல்துறையினர் விரைந்து சம்பவ இடம் சென்று மேற்படி நபர்கள்மீது பெரியகுளம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தும், கைது நடவடிக்கை மேற்கொண்டும், சம்பவத்தில் ஈடுபட்ட காவலர் சிதம்பரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

... வடிவேலு

## கடலூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

கடலூர், ஜூன்.



கடலூர் மாவட்டம், நடுவீரப்பட்டு காவல் நிலைய சரகம் பத்திரக்கோட்டையில் 4.6.2026 தேதி ராமச்சந்திரன் மகன் குணசேகரன் (60) என்பவர் தனது மோட்டார் பம்பு செட்டில் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் பலத்த வெட்டுக்காயங்களுடன் கொலை செய்யப்பட்ட தகவல் அறிந்ததும் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் IPS அவர்கள் நேரில் சென்று விசாரணை செய்தார் உடன் துணை காவல் கண்காணிப்பாளர்கள் தமிழ் இனியன் கந்தன் காவல் ஆய்வாளர் வேலுமணி உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் மற்றும் மோப்பநாய் பிரிவு கைரேகை நிபுணர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு உடனடியாக வரவழக்கப்பட்டு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். இது தொடர்பாக நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் உயிரிழந்த குணசேகரனுக்கும் அவரது மகன் ராஜாராம் (26) என்பவருக்கும் நீண்டகாலமாக குடும்ப பிரச்சனை இருந்தது தெரியவந்ததால் சந்தேகத்தின் பேரில் ராஜாராம் என்பவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் ராஜாராமுக்கும் அவரது தந்தைக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்த சூழலில் தந்தை உயிருடன் இருந்தால் தான் நிம்மதியாக வாழமுடியாது என திட்டமிட்டு முதல் நாள் இரவு தனது தந்தை மதுபோதையில் சம்பவ இடத்தில் கட்டிலில் படுத்துகொண்டு இருந்தபோது, தான் கொண்டு சென்ற கத்தியால் தனது தந்தையை குத்தி கொலை செய்தது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. கொலை குற்றவாளி ராஜாராம் வயது 26 த/பெ குணசேகரன் மெயின் ரோடு பத்திரக்கோட்டை என்பவரை கைது செய்தும் கொலைக்கு பயன்படுத்திய கத்தியை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

... புஷ்பராஜ், விமல்ராஜ்

## திருவண்ணாமலை மாவட்ட காவல்துறை செய்திகள்

திருவண்ணாமலை, ஜூன்.

வெளிநாட்டவர்களை தங்க வைப்பதற்கு C-FORM கட்டாயம். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை பாயும் - காவல் துறை எச்சரிக்கை

திருவண்ணாமலை மாவட்டத்துக்கு மாதந்தோறும் சுமார் 2000 வெளிநாட்டினர் வருகை தருகின்றனர். இதில் பெரும்பாலானோர் ஆன்மீகத்தை நாடி வருகின்றனர். இப்படி வரும் வெளிநாட்டவர்களை உள்ளூர்வாசிகள் தங்கள் குடியிருப்புகளில் தங்க வைக்க வேண்டுமெனில் காவல் துறையிடமிருந்து அனுமதி பெற்ற C-FORM வெளிநாட்டவர்களின் தகவலை பதிவேற்றிவிட்டு பின்பு தங்க வைக்க வேண்டும். அதன்படி, திருவண்ணாமலையில் உள்ள ஆசிரமங்கள், தங்கும் விடுதிகள், வீடுகளில் ஏற்கெனவே முறையாக C-FORM ID அனுமதி பெற்று வெளிநாட்டவர்களை தங்குவதற்கு இடமளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வெளிநாட்டினர் பலருக்கு வீடுகளிலோ, தங்கும் விடுதிகளிலோ அல்லது அகதிகள் முகாம்களிலோ காவல்துறையிடம் எவ்வித தகவலும், அனுமதியும் இல்லாமல் மாவட்டத்தில் உள்ளவர்கள் வாடகைக்கு விடுவதாக புகார்கள் வருகின்றன.

குறிப்பாக திருவண்ணாமலை நகரப் பகுதி மற்றும் திருவண்ணாமலை கிரிவலப்பாதையை ஒட்டியுள்ள பகுதிகள் போன்ற இடங்களில் உள்ள வீடு மற்றும் விடுதி உரிமையாளர்கள் தங்களது குடியிருப்புகளில் அனுமதி பெறாமலும், போதிய பாதுகாப்பின்றியும் வெளிநாட்டவரை தங்க வைத்து வருகின்றனர்.

இதனால் வெளிநாட்டவர் எங்கே தங்கியுள்ளனர் என்பது குறித்த சரியான தகவல் தெரியாமல் போவதால் அவர்களின் விசா நீடிப்பு, விசா மாற்றம், இதர சேவைகளை பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

எனவே இனிவரும் காலங்களில் வெளிநாட்டவர்களை தங்குவதற்கு அனுமதி அளித்த 24 மணி நேரத்தில் அந்த நபர் குறித்த அடிப்படை விவரங்களை ஆன்லைன் மூலம் C-FORM-ஆக பதிவு செய்ய வேண்டும். C-FORM தகவல் பதிவு செய்யாமல் அல்லது வேறு முகவரியில் எடுத்த C-FORM வைத்தோ வெளிநாட்டவர்களுக்கு தங்க இடமளித்தால், சம்பந்தப்பட்ட தங்குமிடத்தின் உரிமையாளர் மீது Immigration & Foreigners Act 2025 படி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 வருடம் வரை சிறை தண்டனை அல்லது ரூ.3 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, வெளிநாட்டவரை தங்களது வீடு, தங்கும் விடுதி, ஆசிரமம், மருத்துவமனை, பள்ளி அல்லது கல்லூரி போன்ற வளாகங்களில் தங்க வைப்பதற்காக பிரத்யேக இணையதள முகவரியின் பயனாளர் அடையாள எண் மற்றும் அதற்கான வழிமுறைகளை திருவண்ணாமலை மாவட்டக் காவல் அலுவலகத்தில் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

... நிர்வாக ஆசிரியர்

## தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

தஞ்சாவூர், ஜூன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்விரோத பகை காரணமாக வெடிகுண்டு வீசப்பட்ட வழக்கில் குற்றவாளி மீது குண்டர் சட்டம் பாய்ந்தது...



தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் உட்கோட்டம் நாச்சியார்கோவில் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் 29.04.2026-ம் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையில் முன்விரோத பகையின் காரணமாக வீட்டில் வெடி குண்டு வீசியதில் பத்மகுமரனுக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனத்தை எரித்து கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக சாக்கோட்டையை சேர்ந்த பத்மகுமரன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளியான கும்பகோணத்தைச் சேர்ந்த தர்மராஜ் (வயது-33) என்பவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேற்படி குற்றவாளியான கும்பகோணத்தைச் சேர்ந்த தர்மராஜ் (வயது- 33) என்பவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை வேண்டி திருவிடைமருதூர் உட்கோட்ட துணைக்காவல் கண்காணிப்பாளர் வேண்டுகோளின்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் பரிந்துரையின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதின் படி மேற்படி குற்றவாளிகளை 31.05.2026-ம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.



தஞ்சை மாவட்டத்தில் முன்விரோத பகை காரணமாக கொலை வழக்கில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது...





தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் உட்கோட்டம் மெலட்டூர் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 2025-ம் வருடம் காதல் விவகாரத்தில் காதலியை கொலை செய்த வழக்கில் சிறையிலிருந்து ஜாமினில் வெளிவந்த அஜித்குமாரை 25.04.2026-ம் தேதி காதலியின் உறவினர்கள் வீட்டிற்குள் புகுந்து அஜித்குமாரை வெட்டியதில் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டாதாக அவரது அண்ணன் சக்தி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மெலட்டூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளான தஞ்சாவூர், மாரியம்மன் கோவிலைச் சேர்ந்த மணிகண்டன்(வயது-33), சரவணன் (வயது-44) மற்றும் தஞ்சாவூர், மேலவீதியைச் சேர்ந்த மாரி (வயது-39), ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேற்படி குற்றவாளிகளான மாரியம்மன் கோவிலைச் சேர்ந்த மணிகண்டன், சரவணன் மற்றும் தஞ்சாவூர் மேலவீதியைச் சேர்ந்த மாரி ஆகியோர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை வேண்டி பாபநாசம் உட்கோட்ட துணைக்காவல் கண்காணிப்பாளர் வேண்டுகோளின்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் பரிந்துரையின் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டதின் படி மேற்படி குற்றவாளிகளை 31.05.2026-ம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.

... ராஜேஷ்

## கரூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

கரூர், ஜூன்.

கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.என்.ஹரி கிரண் பிரசாத் IPS அவர்கள் தெரிவித்துள்ள அறிக்கையில், கரூர் மாவட்ட ஊர்க்காவல் படை பிரிவில் காலியாக உள்ள ஊர்க்காவல் படை வட்டார தளபதி (Area Commander) பதவிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. கல்வித்தகுதி பட்டப்படிப்பு அல்லது படித்தவர்களாக இருக்கவேண்டும். வயது வரம்பு 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் முதல் 50 வயதிற்குள் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். இது ஒரு கௌரவப்பதவி என்பதால் இதற்கு ஊதியம் எதுவும் வழங்கப்படமாட்டாது. நல்ல உடற்தகுதி உடைய, மற்றும் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், உயர் பதவி வகிப்பவர்கள், வட்டாரதளபதி பதவியில் சேர்ந்து தொண்டு செய்ய விருப்பம் மற்றும் சேவை மனப்பான்மை உடைய ஆண்/பெண் நபர்கள் விண்ணப்பிக்கலாம். ஊர்க்காவல் படை வட்டார தளபதி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவத்தினை கரூர் மாவட்ட அலுவலக வளாகத்தில் உள்ள ஊர்க்காவல் படை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்வி சான்றிதழ் கல்வித்தகுதிக்கான சான்றிதழ், அரசு மருத்துவரிடம் பெறப்பட்ட மருத்துவதகுதி சான்றிதழ், 2 புகைப்படங்கள் ஆகியவற்றை காவல் கண்காணிப்பாளர், கரூர் மாவட்டம்,கரூர் 639001 என்ற முகவரிக்கு 19.06.2026ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

... சந்திரகுமார், புருஷோத்தமன், ஹரிஹரன், சேது

## ஈரோடு மாவட்ட காவல்துறை செய்திகள்

ஈரோடு, ஜூன்.

ஈரோடு நகர காவல் நிலைய சரகத்தில் போதை மாத்திரைகள் வைத்திருந்த 4 நபர்கள் கைது

ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி, I.P.S., அவர்களின் நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் (01.06.2026) ஈரோடு, நாச்சியப்பா ரோடு, பாய் மீன் கடை அருகில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனைக்காக வைத்துக் கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின்படி, ஈரோடு நகர காவல் நிலைய போலீஸார் ஈரோடு, நாச்சியப்பா ரோடு பகுதிகளில் ரோந்து மேற்கொண்டு அங்கு சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த 1. கௌரிசங்கர்(22), த/பெ.சக்திவேல், 4/54, பம்பிங் ஸ்டேசன் ரோடு, திருநகர் காலனி, ஈரோடு. 2. விக்னேஷ் (22), த/பெ.தியாகராஜன், 1/49, அண்ணா நகர், ஆவரன்காடு, பள்ளிப்பாளையம், நாமக்கல் மாவட்டம் (தற்போது IOB Bank அருகில், திருநகர் காலனி, ஈரோடு. 3. முகமது ஜாமீல்(21), த/பெ.நிதார், 27/11, மாதவக்காடு, கிருஷ்ணம்பாளையம், ஈரோடு. 4. தீபக் (24), த/பெ. பழனிச்சாமி, 47-18, கமலா நகர், திருநகர் காலனி, ஈரோடு. ஆகியோர்களை பிடித்து சோதனை செய்தபோது அவர்கள் வசமிருந்த ரூ.2,70,000/- மதிப்புள்ள 8100 எண்ணிக்கையிலான TAPENTADOL TABLET மற்றும் TN 33 BM 1078 Activa இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்து ஈரோடு நகர காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

குற்றத் தடுப்பு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்டம் முழுவதும் இரவு நடை ரோந்து...

ஈரோடு மாவட்டத்தில் இரவில் குற்றத்தை தடுக்கும் பொருட்டும் பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் பொருட்டும், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி, I.P.S., அவர்கள் தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் நடை ரோந்து (Foot Patrol) மேற்கொண்டனர். ஈரோடு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்ற இந்த நடை ரோந்து பணியில் அதிக அளவில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

... பாலச்சந்திரன்



## ஆவடி காவல் ஆணையரக காவல்துறை செய்திகள்

ஆவடி, ஜூன்

ஆவடி காவல் ஆணையரக போலீசாரின் கஞ்சா தடுப்பு நடவடிக்கையில் ஒரே நாளில் கொரட்டூர், திருமழிசை பகுதிகளில் 22.2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. மொத்தம் 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்

போரூரில் Chin Chain செயலி மூலம் Crypto currencyல் முதலீடு செய்து லாபம் கிடைக்கும் எனக்கூறி ஆன்லைன் மோசடி செய்த நபர்களுக்கு வங்கி கணக்குகளை கொடுத்து கமிஷன் பெற்று வந்த நபரை கைது செய்து இணையவழி குற்றப்பிரிவு போலீசார் 19.05.2026 நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்




(19.05.2026) எண்ணூர் போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சுனாமி குடியிருப்பு பகுதியில் மேற்கொண்ட சோதனையில்,போலீசார் சுமார் 2 கிலோ கஞ்சா மற்றும் 180 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து, விற்பனை செய்து வந்த 5 நபர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர் .

அம்பத்தூரில் 9 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த நபருக்கு IPC பிரிவின்படி 10 ஆண்டுகள் சிறைதண்டனை (ம) ரூ.10,000 அபராதம் (ம) POCSO சட்டத்தின்படி 10 ஆண்டுகள் சிறைதண்டனை (ம) ரூ.10,000 அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது



திருநின்றவூர் போலீசார், இருசக்கர வாகனத்தில் கடத்திவரப்பட்ட 1.14 கி.கி கஞ்சாவை பறிமுதல் செய்தும், தொடர்ச்சியாக வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் (ம) 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்து, உடந்தையாக இருந்த 2 நபர்களை கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்

பூந்தமல்லியில் ஓய்வூதியம் பெறும் நபரின் வங்கிக் கணக்கிலிருந்த பணத்தை,வேறு வங்கிக் கணக்கிற்கு பரிமாற்றம் செய்த, ஆன்லைன் மோசடி நபர்களுக்கு கமிஷன் பெற்று வங்கி கணக்குகளை கொடுத்த மூவரை இணையவழி குற்றப்பிரிவு போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

போலி ஆவணங்கள் மூலம், கூட்டு சதி செய்து சோழவரம் பகுதியில் நில மோசடியில் ஈடுபட்டு தலைமறைவாக இருந்த நபரை, ஆவடி காவல் ஆணையரக மத்திய குற்றப்பிரிவு (CCB) நில பிரச்சனை தீர்வுப் பிரிவு-III போலீசார் 12.05.2026 கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

... இளவரசன், சுரேஷ்

## திருவள்ளூர் மாவட்ட காவல்துறை செய்திகள்

திருவள்ளூர், ஜூன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மற்றும் சட்டம்-ஒழுங்குக்கு பிரச்சினை செய்பவர்களுக்கு எதிராக தீவிர தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட நடவடிக்கைகளின் போது 71 நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 14 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்டிருந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருவள்ளூர் மாவட்ட காவல்துறை, பொதுமக்களின் பாதுகாப்பையும், சட்டம்- ஒழுங்கையும் நிலைநிறுத்த உறுதியாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்களின் அமைதி, பாதுகாப்பு மற்றும் சட்டம்-ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக செயல்படும் நபர்கள் மீது தொடர்ந்து கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

... இளவரசன், சுரேஷ்

## தாம்பரம் மாநகர காவல்துறை செய்திகள்

தாம்பரம், ஜூன்.

2024-2025 கல்வி ஆண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்ற காவல் ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு தாம்பரம் மாநகர காவல் ஆணையர் திரு.சஞ்சய் குமார் IPS., அவர்கள் வெகுமதிகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தாம்பரம் காவல் ஆணையாளர் திரு.சஞ்சய் குமார் IPS., அவர்கள் உத்தரவின் படி இரவு நேரத்தில் போலீசார் மேற்கொண்ட அதிரடி ஆபரேஷனில் 25க்கும் மேற்பட்ட ரவுடிகள் மற்றும் போதைப் பொருள் விற்பனை செய்யும் குற்றவாளிகள் கைது.

தாம்பரம் மாநகர காவல் குன்றத்தூர் பகுதியில் தடை செய்யப்பட்ட கஞ்சா விற்ற நபர் கைது செய்யப்பட்டு, 6.7 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

T-4 சங்கர் நகர் காவல் நிலைய எல்லையில் போலீசார் நடத்திய வாகன சோதனையில் 266 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

தாம்பரம் மாநகர காவல் துறையினரின், தொடர்ச்சியான சிறப்பு சோதனையில் 170 கிலோ கஞ்சா பறிமுதல் - 4 குற்றவாளிகள் கைது.

தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் திரு. சஞ்சய் குமார், IPS. அவர்களின் உத்தரவின்படியும், தாம்பரம் மாநகர காவல்துறையினரால் போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத செயல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் சிறப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாகவும், 25.05.2026 அன்று தாம்பரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (PEW) காவலர்கள், திருநீர்மலை சர்வீஸ் சாலையில், ஸ்ரீதேவி டிரஷர் அருகே தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக வந்த மாருதி எர்டிகா காரை (பதிவு எண்: AP39NR3301) நிறுத்தி சோதனை செய்ததில், 170 கிலோ கஞ்சா இருந்ததைக் கண்டறிந்து, கஞ்சாவையும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரையும் பறிமுதல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, 1) Palla Varahala Babu, A/35, S/o Nagaraj, Krishnadevi Pettai, Anakapalli, Andhra Pradesh, 2) Galla Sathya Narayana, A/29, S/o Galla Apparao, Golkonda, Narsipatnam, Andhra Pradesh, 3) Senapathi Durga Prasad, A/24, S/o Babu Rao, Anakapalli, Andhra Pradesh 4) Vankala Durga Prasad, A/23, S/o Vankala Srinu, No.44/2, Pallavuru Colony, Visakhapatnam, Andhra Pradesh, ஆகிய 4 நபர்களை கைது செய்தனர்.

இது தொடர்பாக, தாம்பரம் PEW காவல் நிலையத்தில் Cr.No.112/2026 u/s 8(c), 20(b)(ii)(C)29(1) NDPS Act.,-ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. மேற்படி, கைது செய்யப்பட்ட குற்றவாளிகளும் சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

தாம்பரம் மாநகர காவல்துறை, நகரில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் தொடர்ந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

... டேனியல்ராஜ், உதவி ஆசிரியர்

## கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை செய்திகள்



கள்ளக்குறிச்சி, ஜூன்.

21.05.2026-ந் தேதி 14.00 மணிக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக திருமதி ஷஹ்னாஸ்,இ.கா.ப.,அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் துறையின் சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கை...

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு, அமைதி மற்றும் சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்தும் நோக்கில் மாவட்ட காவல்துறையினரால் பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், கடந்த இரண்டு நாட்களாக மாவட்டம் முழுவதும் சிறப்பு சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகளின் போது, மாவட்டத்திலுள்ள 163 சரித்திர பதிவேடு குற்றவாளிகளில் சுமார் 76- க்கும் மேற்பட்ட சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் வீடுகளில் நேரடியாக சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதில் 09 நபர்களை கைது செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களின் அமைதி மற்றும் பாதுகாப்பை பாதிக்கும் வகையிலான எந்தவித சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடக்கூடாது எனவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தேவையான பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. குற்றச்செயல்கள் மற்றும் சமூக விரோத செயல்களை முற்றிலும் கட்டுப்படுத்தும் நோக்கில், கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையினரின் கண்காணிப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது

கரியாலூர் காவல் நிலைய இரட்டை கொலை வழக்கின் எதிரியான சதிஷ் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது.

கடந்த 25.04.2026-ந் தேதி கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், பெருக்கஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த ஆண்டி மகன் சதிஷ் (28) என்பவர், இருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பாக கரியாலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில் 26.05.2026-ந் தேதி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொது அமைதியை குலைக்கும் வகையில் சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகளில் தொடர்ந்து ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்படுவார்கள் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்

பெங்களூரில் இருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 180 கிலோ புகையிலை பொருட்களை சட்டவிரோதமாக காரில் எடுத்துவந்த பெங்களூரைச் சேர்ந்த இருவரை கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை அதிரடியாக கைது செய்தது.

உளுந்தூர்பேட்டை காவல் நிலைய கொலை முயற்சி வழக்கில் தொடர்புடைய 7 நபர்களை அதிரடியாக கைது செய்த கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் கடந்த ஆண்டு நடந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 02 நபர்கள், மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்தில் 05.05.2026 முதல் தினசரி ஆஜராகி கையொப்பமிட்டு வந்தனர். இந்நிலையில், 25.05.2026ந் தேதி காலை நீதிமன்றத்தில் ஆஜராகி கையொப்பமிட்டு செல்லும் போது உளுந்தூர்பேட்டை - சேலம் ரவுண்டாணா அருகே மர்ம கும்பல் வழிமறித்து கொலை முயற்சியில் ஈடுபட்டனர்.




இச்சம்பவம் தொடர்பாக உளுந்தூர் பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் உளுந்தூர்பேட்டை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

தனிப்படையினரின் விசாரணையில் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மற்றும் அவர்களுக்கு வாகனங்கள் வழங்கி, அடைக்கலம் கொடுத்து உதவிய சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் குற்றச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், இரண்டு கார்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றபட்டுள்ளன. இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை கைது செய்ய தனிப்படை காவல்துறையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை தொடரும் என காவல்துறை தெரிவித்துள்ளது.

... முரளி

# சென்னை மாவட்ட காவல்துறை செய்திகள்



சென்னை, ஜூன்.

கோயம்பேடு காவல் நிலையம்:

கோயம்பேடு பகுதியில் உள்ள தனியார் மதுபான பார் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு, பார் சீல் வைக்கப்பட்டது.

இருசக்கர வாகனத்தில் சென்ற 2 பெண்கள் மீது கார் மோதியதில், ஒரு பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு 17 வயது சிறுமி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக 3 நபர்கள் கைது. கார் பறிமுதல். விசாரணையில் விபத்து நடைபெறுவதற்கு முன்பு இரு தரப்பினரும் ஒரு தனியார் பாரில் சந்தித்து தகராறில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. அந்த தகராறை பழிவாங்கும் நோக்கில், காரில் சென்ற நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்களை வேண்டுமென்றே மோதியதும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோயம்பேடு பேருந்து முனையத்தில் தூங்கி கொண்டிருந்தவரிடம் வெள்ளி நகைகள், பணம் மற்றும் செல்போன் திருடிச் சென்ற இருவர் கைது.

துறைமுகம் காவல் நிலையம்:

நடந்து சென்ற மூதாட்டியை மிரட்டி பணம் பறித்துச் சென்ற நபர் கைது. பணம் மீட்பு

வேளச்சேரி காவல் நிலையம்:

வேளச்சேரியில் உள்ள தனியார் மேக்கப் ஸ்டுடியோ & ஸ்பாவில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில், ஆறு பெண்களை சட்டவிரோதமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டது. மேலாளர் கைது செய்யப்பட்டார்.

செயின்ட் தாமஸ் மவுண்ட் காவல் நிலையம்:

மடுவங்கரை பாலம் அருகே பணிபுரியும் வடஇந்திய தினக்கூலி தொழிலாளர்களுக்கு, போதைப்பொருள் பழக்கத்தின் தீமைகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கான சட்டரீதியான விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தொழிலாளர்கள் ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருள் இல்லாத வாழ்க்கையை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், போதைப்பொருள் தொடர்பான செயல்பாடுகள் குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அனைவரும் இணைந்து போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்.

தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையம்:

ஓட்டேரி மயான பகுதிக்கு அருகில் ஏற்கனவே இரண்டு நபர்களைக் கத்தியைக் காட்டி மிரட்டிப் பணத்தைக் கொள்ளையடித்த சரித்திர பதிவேடு குற்றவாளியை ரோந்து பணியின் போது கைது செய்து, அவரிடம் இருந்த 40 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

வடக்கு கடற்கரை காவல் நிலையம்:

இருசக்கர வாகனத்தில் வந்து, சாலையில் நடந்து சென்ற நபரிடம் அலைபேசியை பறித்துச் சென்ற



இரண்டு நபர்களை, வடக்கு கடற்கரை காவல் நிலைய காவலர்கள் விரைந்து செயல்பட்டு உடனடியாக கைது செய்தனர்.

ஏழுகிணறு காவல் நிலையம்:

பெண் ஒருவர் தனது வீட்டிற்குள் நுழையும் தருவாயில், முகவரி கேட்பது போல் நடித்து அவரது தங்க நகையை பறிக்க முயன்ற நபரை, ஏழுகிணறு காவல் நிலைய காவலர்கள் விரைந்து செயல்பட்டு உடனடியாக கைது செய்தனர்.

கீழ்ப்பாக்கம் காவல் நிலையம்: 70 வயது முதியவரை வழிமறித்து தாக்கி, அவரிடமிருந்த பணத்தை கொள்ளையடித்த மூன்று நபர்கள் கைது. இரண்டு சிறார்கள் இளஞ்சிறார் நீதிக் குழுமத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டனர். கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீட்கப்பட்டதுடன், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

திருவொற்றியூர் காவல் நிலையம்:

சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த குற்றவாளி கைது. 25 மதுபாட்டில்கள் பறிமுதல்.

சாஸ்திரி நகர் காவல் நிலையம்:

பூட்டிய வீட்டில் பொருட்களை திருடிய நபர் கைது. சுமார் ரூ.35 ஆயிரம் மதிப்புள்ள ஐபோன் மற்றும் கைக்கடிகாரம் மீட்பு.

ஆர்கே நகர் காவல் நிலையம்: மதுபோதையில் கற்களால் தாக்கி காயப்படுத்திய இரு நபர்கள் கைது.

தேனாம்பேட்டை காவல் நிலையம்: இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் திருட்டு வழக்குகள், மேலும் பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டது உள்ளிட்ட மூன்று குற்ற சம்பவங்களில் ஈடுபட்ட இரு நபர்கள் கைது.

சட்டவிரோதமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட 5 நபர்கள் தேனாம்பேட்டை காவல் நிலைய குழுவினரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர். ரூ.80,58,030/- பணம் மற்றும் சீட்டுக்கட்டுகள் பறிமுதல்.

தண்டையார்பேட்டை காவல் நிலையம்:

இருசக்கர வாகனம் ஆட்டோ மீது மோதியதால் ஏற்பட்ட பிரச்சனையில் தாக்குதலில் ஈடுபட்ட ஐந்து நபர்கள் கைது. மூன்று இளஞ்சிறார்கள் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்.

மீனம்பாக்கம் காவல் நிலையம்:

விமான நிலையம் அருகே தொலைந்த செல்போன் துரிதமாக எழும்பூர் இரயில் நிலையம் அருகே மீட்கப்பட்டது.

ஓட்டேரி காவல் நிலையம்:

கஞ்சா மற்றும் வலி நிவாரண மாத்திரைகளை விற்பனை செய்த 3 நபர்கள் கைது. 3.650 கிலோ கஞ்சா மற்றும் 200 மாத்திரைகள் பறிமுதல்.

கே.கே. நகர் காவல் நிலையம்:

டாஸ்மாக் உரிமையாளரை தகாத முறையில் பேசி, மிரட்டிய சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையம்:

மது போதையில் தந்தையை கட்டையால் தாக்கிய மகன் கைது.

மயிலாப்பூர் காவல் நிலையம்:

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த நபர் கைது.

... கதிரவன், முகைதீன், இராமலிங்கம், சக்திவேல்









Editor & Publisher : **R.SRIDHAR**, 7/5, Muthu Devar Street, M K Puram, Subramaiapuram Post, Madurai, Tamil nadu - 625011. Printer by Meera Offset Printers, 104, Venkatrangam Pillai Street, Triplicane, Chennai, Tamil Nadu - 600005.